அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி

531



கலை மன்றம்

அஞ்சா நெஞ்சன்

அழகர்சாமி

கலைச்செல்வன்

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு : 112
முதற் பதிப்பு: நவம்பர் 1953
உரிமை உடையது

விலை ரூ. 0—8—0

விற்பனை நிலையம் :
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

படித்துப் பாருங்கள்

●

இயக்கத்திற்காக வாழ்ந்து, இயக்கத்திற்காக உழைத்து, இயக்கத்திற்காகவே தன்னை ஒப்படைத்துக் கொண்ட ஒரே ஓர் செயல்வீரர் அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி அவர்கள்.

தோழர் அழகர்சாமி அவர்களால் இயக்கம் வலுவடைந்தது. ஆனல் இயக்கத்தால் தோழர் அழகர்சாமி எந்த ஒரு சிறு பயனையும் அடைந்தாரில்லை. இத்தகைய தன்னலம் கருதா தன்மையாளரின் வாழ்க்கை வரலாறே இவ் வேடு! படித்துப் பாருங்கள்!

வணக்கம்

கலைமன்றத்தினர்

ஊடுருவி எழுதியவை

●

ஆராய்ச்சி

கோயில்கள் (இங்கர்சால்)
சீர்திருத்தம் ,,
மூடநம்பிக்கை ,,
மதங்கள் ,,
உண்மை ,,
மக்கள் உரிமை ,,
அறியாமை ,,
கடவுள் ,,
அரசாங்கம் (லெனின்)
மாஜி கடவுள்கள்
தொழிலாளர் (மாஜினி)

வரலாறு

கலிங்கப்போர்
வீரமங்கை ஜோன்
உலகைத் திருத்திய உத்தமர்கள் (1-ம் பாகம்)
ஒளி விளக்குகள் (2-ம் பாகம்)
சீனத்துச் சிங்கம்
ரஸ்புடீன்
வால்டையர்
நெப்போலியன்

கதைகள்

ரோமியோ-ஜூலியத் (ஷேக்ஸ்பியர்)
லைலா - மஜ்னு
நா னா (எமிலிஜோலா)

அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி

மகா ஜனங்களே! நம்ம டிவிசன் கவுன்சிலர் இந்த பொதுக்கூட்டத்திற்கு அக்கிராசனராக இருந்து நடத்தும்படி 'காந்திஜீ சேவாசங்கத்தின்' சார்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். நமஸ்தே!

தலைவர் எழுந்ததும் அவர் கழுத்தில் கனமான மாலைகள் விழும். அந்த மாலைகளும், அவருடைய தொந்தியுடன் கூடி அவருடைய முகத்தையே மறைத்துவிடும் பிறகு ஒரு கனைப்பு கனைத்துவிட்டு......

வந்தேமாதரம்.......ஜெய்ஹிந்த்.... நமஸ்தே... ...மகா ஜனங்களே! எனக்கு தேக அசௌக்கியமாய் இருந்த போதிலும் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்று தொண்டர்கள் கேட்டுக்கொண்டதால் வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. தமிழிலே பிரசங்கம் செய்து பழங்கமில்லை. குற்றம் குறை இருந்தா பொறுத்துக்கொள்ள வேண்டும். இச்சங்கத்தார் சேவை பிரமாதமானது. அதன்படியே நீங்களும் சேவைசெய்ய மெம்பர்களாக வேண்டியது. இப்பேட்டையில் நாத்தீகம் என்னும் காலரா பரவுவதாகத் தெரிகிறது......... (இதற்குள் தொண்டை அடைத்துக்கொள்ளும். பூபோட்ட கண்ணடி குவளையில் உள்ள காய்ச்சிய பாலை அருந்திவிட்டு பேசு

வார்) அந்த நாத்தீக காலராவுக்கு மேலிடத்தில் மருந்து கண்டுபிடிப்பதாக லெட்டர் வந்தது. அதுவரை நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். அது தொத்திக்கொண்டால் இப்பிரபஞ்சத்திற்கே கேடு வரும். நான் கோயிலில் கதா காலட்சேபம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்கும் உங்களால் ஆனதை உதவி செய்யவும். அதனல் நம் நாட்டில் மழை பெய்யும். நாத்தீக புத்தகத்தைப் படித்து கெட்டுப்போகாமல் இருக்கவும், தாம் செய்த கருமங்கள் தொலையவும் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்; (மறுபடியும் பால் அருந்துவார்.) அடுத்து ஒவ்வொரு தெருவிலும் பஜனை நடத்தவேண்டும். இது மேலிடத்துக் கட்டளை.

இப்போது ஆவேசமாக பல இளைஞர்கள் பிரசங்கம் செய்ய துடிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவராகப் பேசுவார்கள்.

நம்முடைய தலைவர் பல ஆண்டுகளாக சேவை செய்து அனுபவம் பெற்றவர். வரப்போகிற தேர்தலிலும் நின்று சேவை செய்யவேண்டும். அவருக்குத்தான் நாத்தீகத்தை எதிர்க்கும் திறமை உண்டு என்று பின்பாட்டு பாடுவான் ஒருவன்.

நம்முடைய கூட்டம் ஹாலுக்குள், போலீஸ் பந்தோபஸ்துடன் நடக்கவேண்டி இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் கலகக்காரர்கள் கூட்டம் பெருகுகிறது என்று தாளம் போடுவான் மற்ருெருவன்.

இங்குள்ள தொழிலாளருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். கலகக்காரர்களை நம்பி ஸ்டிரைக் செய்யா

தீர்கள். உங்கள் முதலாளி காந்தி சில நாட்ட ஆயிரம் ரூபாய் இனமாகத் தந்திருக்கிறார். குடிக்க கஞ்சியாவது கிடைப்பதில் மண்ணைப் போட்டுக் கொள்ளாதீர்கள் என்று ஒத்து ஊதுவான் ஒருவன்.

இப்படியாக அவர்கள் காலட்சேபத்தை முடித்துக் கொள்வார்கள். ஜெய்ஹிந்த், வந்தேமாதரம், காந்திக்கு ஜே என்பதோடு தலைவர் காரில் பறந்து விடுவார்.

ஆம்! இன்று பணக்காரர்கள்! படாடோபமாய் பிரகாசிப்பவர்கள்! பட்டம் பதவி பெற்று பணம் பெருக்க விரும்புபவர்கள்தான் இன்று தேசாபிமானிகளாக மக்களுக்குக் காட்சி அளிக்கிறார்கள். அவர்கள் பேருக்கும் புகழுக்கும் அலைகிறார்கள் என்பது அறியமுடியவில்லை. அதே சமயத்தில் நாட்டன்புகொண்டு உழைக்கும் நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் உரிமைப் போராட்டத்திற்காக அறப்போரிடுபவர்கள். இதுபோன்று தன் வாழ்வை அகால மரணத்திற்கு உட்படுத்திக்கொண்ட விடுதலை வீரர்களைப்பற்றி மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில்லை. அவர்கள் எல்லாம் மறைக்கப்பட் டிருக்கின்றார்கள்.

இருந்தாலும் ஒருசில உண்மை வீரர்கள் உலாவத்தான் செய்கின்றனர். அவர்களில் ஒருவரை நாம் சற்று ஆராய்வோம்.

மன்னார்குடியில் ஒரு கூட்டம். கூட்டத்தில் கல்மாரி, கேள்விமாரி பெய்துகொண் டிருக்கிறது, முக்கால் மணி நேரமாக. பேசிக்கொண்டிருந்த ஒருவர் மேடையிலிருந்து கீழே இறங்கினார். கீழிருந்த நாலைந்து கற்களை எடுத்துக்

கொண்டு மேடைமீது ஏறினர். கற்களை மேஜைமீது வைத்தார். இவைகளைக் கலகம் செய்து கல் வீசியவர்கள், என்ன செய்யப் போகிருர் என்று பார்த்துக்கொண்டே இருந்தார்கள். மேலும் அவர் பேசினர், “தோழர்களே! இந்த ஊருக்கு நான் புதியவன். இவ்வூர் வழக்கம் எனக் குத் தெரியாது. பெரிய வைஷ்ணவ வகுப்புக்காரனுன எனக்கு இவ்வூர்ப் பழக்கம் தெரியாமல் போனது தப்பு தான். இனி நான் பேசுகிறேன். நீங்களும் கல் போட்டுக் கொண்டே என் பிரசங்கத்தைக் கேளுங்கள். நானும் உங்கள்மீது கல்லே வீசிக்கொண்டே பிரசங்கமும் செய் கிறேன் என்ருர்.” உடனே எல்லோரும் கைதட்டிச் சிரித் தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மேலும் நீண்டநேரம் பேசினர். பொது மக்களும் அமைதியாக இருந்தனர். பகைமையை மறந்து பிரசங்கத் தைக் கேட்டுக்கொண் டிருந்தனர். யார் அந்த அஞ்சா நெஞ்சினர்? யார் அந்த கலங்காத வீரர்?

* * *

“சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப் பியக்கத்தின் தனிப்பெரும் தளபதி! பார்ப்பனீயத் தின் பகிரங்கப் பகைவன்! மூடப் பழக்கவழக்கங்களை முறியடிக்கும் முன்னணித் தலைவன்! வைதீகத்தின் வைரி! வர்ணுஸ்ரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப் பாளி! தந்நலம் மறந்து தன் நாட்டுக்குப் பணியாற் றிய பண்புடையோன்! அறிவுப் பாதையில் அங்கும் இங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத் தறிவாளன்! அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த ஆண்மையாளன்!

கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர் வடையாதே! பகைவரின் படையா? பயப்படாதே! எதிர்க்கட்சியினரா? ஏமாந்துவிடாதே! சனாதனமா? அதில் சாய்ந்துவிடாதே! சதியா? அதனைச்சாகடி! மதுவா? அதனை மங்கவை! மாசுகளைத் துடை! மன்மதையின் மாணிக்கமாக விளங்கு! மரியாதை யைப் பெறு! சுயமரியாதையைப் பெற்றுச் சுக வாழ்வு வாழ முற்படு! இதுவே உன்னுடைய குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று, எங்குச் சென்றாலும் எக்காளமிட்டு, மூலை முடுக்கெல்லாம் முரசொலி கிளப்பித் தன்மான இயக்கத்தின் முன் னணித் தலைவனாக விளங்கி, அஞ்சா நெஞ்சுடன் அறிவுப் பணி புரிந்துவந்தார்."

* * *

இவ்விதம் அறிஞர் அண்ணா அவர்கள் போற்றிப் புகழ்ந்திருக்கிறார், அந்தச் செயல் வீரரை! யார் அவர்?

* * *

"மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரடீஸ் என்ற ஒரு அறிஞரைப் பற்றிக் கேட்டோம்; ஆனால் கண்டோ மில்லை; இவ்விந்தியாவிலேயே அங்ஙனம் கண்ட தாகக் கூறுவாருமில்லை. எனினும் இத் தமிழ் நாட்டில் இன்று அரும் பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீசைக் கண்டோம்; தாடியோடு கண்டோம். அவர்தான் நம் ஈ. வே. இராமசாமிப் பெரியார்.

அவரால் காணப்பட்ட நமது இயக்கமும் அவ்வியக் கத்தின் அழுத்தமான கொள்கைகளும் தான் நான் மாற்ற மடையாததற்கும், இம் மேடையில் ஏறுவதற்கும், நான்

தன்மதிப்போடு விளங்குவதற்கும் முதற் காரணம்என் பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவ்வியக்கத் தொண்டாற்றிவரும் தமிழர்கட்கு இன்று நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது.

பழைய மௌடீகங்களைக் கைவிடுங்கள். பழைமை பழைமை என்று சொல்லும் பழக்கத்தை வேரறுத்து, மௌடீகத் தன்மைகளை விட்டொழித்து, பழம் பெரும் மக்களின் வீரவாழ்க்கையைக் கைக்கொள்ளுங்கள். இவற் றைச் செய்து முடிக்கும் வரையில் நெருக்கடி இருந்து தான் தீரும்.

மற்றவர்களைப் போல நம்மிடத்தில் ஜீயர்களில்லை, நம்மிடத்தில் மடாதிபதிகளில்லை, நம்மிடத்தில் ஒரு பஜாஜ் இல்லை; நம்மிடத்தில் ஒரு பிர்லா இல்லை; நம்மிடத் தில் பணக்காரக் கும்பல்கள் இல்லை; எல்லோரும் ஏழை கள்.

இந்நாட்டில் பாண்டியன் ஆண்டென்ன? விஜயரங்க சொக்கநாத நாய்க்கன் ஆண்டென்ன? வேறு நீர்வளம், நிலவளம் கொழித்துப் புலவர் வாய் கிழிய வருணித்துப் பாடிய பேரரசர்கள் ஆண்டுதான் என்ன பயன்?

நாங்கள்தான் இந்தநாட்டுத் தலைவர்கள், தமிழ்நாடே எங்களுடையது என்று பித்தலாட்டம் செய்து, இந்தப் பிராமணியம் தமிழர்களை அடிமையாக்கி வைத்திருப்பது தவிர வேறு என்ன பயனைக் கண்டோம்.

இதை வெளிப்படுத்திய நம் இயக்கத்தில் வர வர அறிஞர்கள் பலர் சேர்ந்தனர். அவர்களுள்ளும் பலரு

டைய நிலைமை இன்று தடுமாற்றமாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் பார்ப்பனியத் தொல்லைதான். எந்தத் தொல்லைக்கும் அசையா உள்ளத்துடன் உழைக்கும் தோழர்கள் சிலரே யாவர்.

இன்னும் எத்தனையோ மக்கள் படிக்கின்றனர்; எழுது கின்றனர், ஆனால் நடப்பதில்லை. சிந்திக்கிறோம், நன்கு நினைத்துப் பார்க்கிறோம். நல்லறிவு வருவதில்லை; தவறிச் சிலர் நடைமுறையில் காட்ட முற்பட்டால் வஞ்சகப் பிராமணியம் குறுக்கிடுகிறது.

இந்தப் பிராமணியம் இந்நாட்டில் வருவதன்முன் இங்கே வகுப்புச் சண்டை உண்டா? மதச் சண்டை உண்டா? பூணூல் உண்டா? நயவஞ்சகமுண்டா? ஒரு குலத்துக்கு ஒரு நீதியும், தருப்பையும் பஞ்சாங்கங்களும் உண்டா? அவற்றின் கொடுமைகள் உண்டா? என்றுதான் கேட்கிறேன்.

இந்தச் சூழ்ச்சிகள் தமிழன் மனதில் வேரூன்றி வெளிக் கிளம்புமானல், அவனல் சாதிக்க முடியாத தில்லை என்பதை உறுதியுடன் கூறுகிறேன்.

நான் இளைஞர்களை .நம் இயக்கத்தில் ஈடுபடுத்தும் கருத்துடையேன். சுயமரியாதை இயக்கத்தை பூர்ண மாகத் தழுவுகிறேன். இவ்வியக்கம் எல்லா மனிதர்களும் சமம் என்னும் கொள்கையைக் கொண்டு மக்களுக்குப் பொருளாதார சமூக விஷயங்களில் சமத்துவம் எவ்வாற் ருலும் எய்தல் வேண்டும் என்னும் கருத்தை உறுதியாய்க் கொண்டது.

பலர் நம்மைப் பணக்காரர்களை நாம் எதிர்த்தல் பயனற்றதாகு மென்கிறார்கள். இது கோழைத்தனமாகும். உண்மைக்கே போராடுவோம். உண்மையே ஜெயிக்கும். வீரர்களாகிய இளைஞர்களுடைய ஊக்கத்தை எந்தப் பலத்தாலும் எந்த காலத்திலும் எதிர்க்க முடியாது. இந்த இயக்கத்தைச் சிலரே துவக்கினர். ஆனால் இப்பொழுது இவ்வியக்கத்தில் பல பெரியோர்களும், அளவற்ற மக்களும் சேர்ந்திருக்கின்றனர். இவ்வியக்கத்தை இனிஅசைத்தல் இயலாது.

பெரிய பணக்காரர்களைத் தழுவும் சோற்றாலடித்த பிண்டங்கள் பலர் இருக்கின்றனர். அப் பதர்கள் அப் பணக்காரர்கள் மக்களுடைய பொதுத் தன்மையைப் புறக்கணிக்க உதவிசெய்து வருகின்றனர். ஆயினும் அவர்களால் என்ன செய்ய முடியும்? ரஷிய தேசத்து அரசனைப் பற்றியும், அவனது அவகேடான முடிவைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள். நம் தேசத்து இளைஞர்களும், மற்ற தேசத்தார்களைக் காட்டிலும் ஆண்மையில், மாண்பில் குறைந்தவர்களல்ல, உண்மையின் பொருட்டு வெற்றியடையும் உறுதியுள்ள வீரர்களாய் நாம் சென்றுகொண்டிருக்கிறோம். எவ்விடையூறு எதிர்ப்படினும் அஞ்சமாட்டோம்.

என்னைப்பற்றித் தோழர்கள் அடிக்கடி கொள்கை மாறுவது என்ற பழக்கம் என்னை எட்டிப்பார்க்கவில்லை என்கின்றனர் உண்மைதான். இதற்கிடையில் எனக்கு ஒரு ஐயம், அதாவது கொள்கை மாறுவது எதற்கு? என்பது தான்.

வெல்லத்தை விட்டு வேம்பைச் சுவைப்பதா? அமுதத்தைவிட்டு நஞ்சைக் குடிப்பதா? இம்மாதிரி செய்

வோர் பைத்தியக்கார முட்டாள்களல்லவா? அப்படிப் பட்டவர்கள்தான் சு. ம. இயக்கத்தைவிட்டுப் பிற கொள் கைக்கு மாறுவார்கள்.

ஆனால் நான் அப்படிப்பட்டவனல்லன். எனவே என் அகராதியில் 'மாற்றம்' என்பதும் இல்லை. நான் அவ்வாறு மாறின பல தோழர்களின் உள்ளங்களை நன்கு அலசிப் பார்த்திருக்கிறேன்.

பரிதாபம்! அவர்களெல்லாம் ஒவ்வொரு தன்னலத் தைக் கருதி மாறியும் பயனடையாமல் தவிக்கின்றனர். என்பதை உணர்ந்துதான் இங்ஙனம் கூறுகிறேன். அவர் கள் இன்று புதிய பக்தர்களாக விளங்குகின்றனர். ஆனால். அவர்களெல்லாம், "அன்று பிரிந்தோம்; இன்று கூடி னோம், இனி, என்றும் இக் கொள்கையிலேயே இருப் போம்" என்று கூறிக்கொண்டு நம்மோடு வரக்கூடிய நாள் தூரத்திலில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகிறேன்.

நீ எங்களை இன்னும் கேவலமாகத் திட்டு; கவலை இல்லை! ஆனால் பத்திரிகைகளில் விஷமத்தனமாகவும், கேவலமாகவும் எழுதுவதால் பாதிக்கக்கூடிய நிலைமையில் எங்கள் சுயமரியாதை கட்சியோ, நாங்களோ இல்லை.

சம்மனை நாங்கள் பெற்றுக் கொள்வோம்! கோர்ட் டில் நாங்கள் செய்ததை ஒப்புக்கொள்ளுவோம். அதனால் வரும் பலனை அனுபவிப்போம். ஆயிரக்கணக்கான மக் கள் முன்பு நாங்கள் செய்ததை மறுத்து கோர்ட்டில் பொய் சொல்லமாட்டோம். பொது வாழ்க்கையில் இருக் கும் நாங்கள் பொய்யர்களாக மாட்டோம்."

என்ற அரிய — பொருள் பொதிந்த — கருத்துக் குலுங்கும் பொன்னான உரைகளை திராவிடத்திற்குத் தந்தார்.

யார் அவர்?

அவர்தான் இன்று ஆயிரமாயிரம் இளைஞர்களின்— திராவிடர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தன் உருவத்தை ஆழ பதித்துகொண்டவர், **அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி** என்று போற்றப்படுபவர், தென்னாட்டின் மிக முக்கிய நகரமாகிய மதுரைக்கு அடுத்துள்ள **அம்பட்டப் பட்டி** என்னும் கிராமத்தில் பிறந்தார். இருந்தாலும் அவர் அங்கேயே தன் வாழ்நாளைக் கழிக்கவில்லை. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டையில் அவர் வாழ்வு நடத்த வேண்டிய நிலை யேற்பட்டது.

தோழர் 'அழகரி' அவர்கள் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த காலத்தில் சாதாரண ஒரு திண்ணைப் பேச்சாளராகவே இருந்தார்.

இவர் சிறு வயதில் உச்சுக்குடுமி, கதர் வேட்டி, தக்களி ஏந்திய கரம் இவைகளுடன் தான் காட்சி அளித்தார். இயக்கப்பற்று வந்த பின்னர்தான் இவருடைய உச்சுக்குடுமி ஒழிந்தது.

பட்டுக்கோட்டையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தோழர் S. V. லிங்கம் அவர்கள் பேசிக்கொண் டிருந்தார். அவர் பேசிக்கொண் டிருந்த போது பல மாணவர்கள் அவரிடம் கேள்வித் தாள்களைத் தந்தனர். அவ்விதம் தந்தவர்களில் தோழர் அழகர்சாமி யும் ஒருவர்.

அதன் பிறகு தோழர் அழகரி அவர்கள் இயக்கத்தின் உயிர்நாடிகளான மாயவரம் நடராஜன், நாகைமணி முதலியவர்களுடன் புறப்பட்டார். பகல் முழுவதும் அழகரி அவர்கள் பெரியார் இராமசாமி அவர்களுடைய கொள்கையைப்பற்றி நடராஜனுடன் வாதம் செய்வார். இவ்விதமாக வாதம் செய்து அதன்பின்னர்தான் சுயமரியாதை இயக்கம் சிறந்தது, உயர்ந்தது என்று தெரிந்து அதிலே பணியாற்ற முன் வந்தார்.

திடீரென்று தான் ஒருநாள் கூட்டத்தில் பேசப் போவதாகச் சொன்னார். அதுவும் இலக்கிய சம்பந்தமாகத் தான் பேசப்போவதாகச் சொன்னார். தொல்காப்பியத்திலிருந்தும், சிலப்பதிகாரத்தி லிருந்தும் ஏதேதோ மேற்கோள்கள் காட்டித் தனது பிரசங்கத்தைச் செய்து கொண்டு வந்தார். 'காலைக் கதிரவனையே' கந்தழி' என்பது. அது பல நிறங்களுடன் தோற்ற மளிப்பதால், அத்தோற்றம் மயில்போல் தெரிகிறது. அதனைத் தமிழன் 'முருகு' —'முருகன்' என்றழைத்து, அதன் அழகுக்காக அதனை வணங்குகிறான்" என்றார். உடனே கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து, "அப்படியானால் பிள்ளையார் கிடையாது-முருகனும் இல்லை யென்று சொல்லுகிறீர்களா" என்றார். கேள்வி கேட்டவர் தொழிலாளர்களிடம் செல்வாக்குள்ளவர். எனவே அவருடைய கேள்வி கூட்டத்தில் சிறு பரபரப்பை உண்டாக்கி விட்டது. அடுத்த நிமிடமே அழகர்சாமி சொன்னார், "தோழனே! நான் சொல்லி வந்தது வேறு; இருந்தாலும் சொல்லுகிறேன்; பிள்ளை யாரும் இல்லை புடலங்காயும் இல்லை, உட்கார்" என்று சொன்னார். அழகர்சாமி கூட்டங்களில் பேசிய முதற் கூட்டம் நாகப்பட்டணத்தில்தான் தொடங்கியது.

சுயமரியாதைக்காரன் தன் கொள்கைகளைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது. தனக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லித் தீரவேண்டும். சிறுகச் சிறுகப் பயின்று சிறந்த பேச்சாளரானார். அழகர்சாமி பேச எழுந்தாலே கைகொட்டி ஆரவாரித்துக் கூட்டத்திலிருப் பவர்கள், சிரிப்புக்குத் தங்களை ஆயத்தம் செய்துகொள் வார்கள். மக்கள் விரும்பிக் கேட்கும் வண்ணம் அவர் பேச்சு வளர்ந்தது.

இவர் அடிக்கடி பட்டுக்கோட்டையில் போஸ்ட் டாபீசுக்கு அருகிலிருந்த முச்சந்தியில் இருந்த ஓர் இடத்தில்தான் பேசுவார். அந்த இடம் மிகவும் கரடு முரடாக இருந்தது. அங்கு இடிந்த வீடு, இடிந்த பாலம், பழைய தேர் போன்றவைகளே இருக்கும். அந்த இடத் தில் ஒரு சிறிய லாந்தர் விளக்குடன் கூட்டம் துவங்கும். சிறிது நேரத்திற்கெல்லாம் விளக்கும் மங்கி மறைந்து விடும். அந்த அமைதியான நேரத்தில் தன் கம்பீரமான குரலால் பேசுவார். அவர் பேச்சு முடிய இரண்டு மூன்று மணி நேரம் பிடிக்கும். இருந்தாலும் எல்லா ரசங்களும் நிரம்பிய அந்தப் பேச்சு முடியாமல் ஒருவரும் போவ தில்லை. அந்த அளவு அந்தக் காலத்தில் சிறந்த பேச்சாள ராகத் திகழ்ந்தார் தோழர் அழகர்சாமி அவர்கள்.

அழகர்சாமியின் சிறிய தந்தை வேணுகோபால் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து பணியாற்றியவர். ஆறு ஆண்டுகளாக தஞ்சை ஜில்லாபோர்டு, அய்யங்கார் ஆட்சியிலிருந்ததை வீழ்ச்சியுறச்செய்து, சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களைத் தலைவராக்கிய பெருமை இவருடையதாகும். இவருக்கு அழகர்சாமி அவர்களிடம்

அளவுகடந்த பற்றுதல். அழகர்சாமி சுயமரியாதைப் பிரசாரம் செய்து வருவதில் மட்டற்ற மகிழ்ச்சி. பிரசாரத்துக்குத் துணையாக இருந்து பிரயாணச் செலவு முதலிய வசதிகளைச் செய்து தருவார்.

அழகர்சாமியை பத்திரிகை நடத்தும்படி நூற்றுக் கணக்கான பணம் கொடுத்தார் வேணுகோபாலர். அழகர்சாமி பணம் வாங்கினரே தவிர அச்சகம் வாங்கவில்லை. பத்திரிகையில் அழகர்சாமியின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் அடிக்கடி வெளிவரும். அதைப் படித்துப் பார்த்து மகிழ்ச்சியடைவார். அச்சகத்துக்காக வாங்கப்பட்ட பணத்தை வைத்துக்கொண்டு, ஒரு பத்திரிகையால் நடத்திக் காட்டமுடியாத அளவுக்கு இயக்கப் பிரச்சாரத்தை சுற்றுப் பிரயாணத்தின் மூலம் செய்து வந்ததைக் கண்ட தோழர் வேணுகோபாலர் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

சுயமரியாதை இயக்க கொள்கைகள் பரவ, பிராம்மணிய தத்துவங்களைக் கண்டித்து ஒழிப்பது போலவே மதச் சம்பந்தமான கண்டனப் பேச்சுடன் அப்போதைய அரசியல் நிலைமையையும் சேர்த்து முதன் முதலாகப் பேசியவர் அழகர்சாமி ஒருவர்தான். இயக்கத்துடன் தொழிலாளர் இணைப்பை முதன்முதலாகச் செய்தவரும் இவரே.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எவ்விதமான நெருக்கடி ஏற்பட்ட காலங்களிலும் அழகர்சாமி தனது கொள்கைக்காகப் பிரசாரம் செய்வதற்கு இடம் கிடைக்கிறதா என்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பார். தோழர்

அழகர்சாமி அவர்களைப் பற்றி தப்பான செய்திகள் பல ஈரோட்டுக்குப் போகும். ஆனால், நாளடைவில் அவை யெல்லாம் சுயமரியாதை இயக்கத்துக்குச் சாதகமாகவே முடியும். கொள்கைப் பிரசாரம் ஒன்றையே குறிக் கோளாக அழகர்சாமி எண்ணுவாரே யன்றி, தன்னைப் பற்றி யார் என்ன சொல்லுகிறார்கள், என்ற பயமோ, கவலையோ கொண்டது கிடையாது.

ஒரு கட்சியின் முக்கிய தலைமைப் பதவியில் வேலை செய்தும் அவர் கட்சித் துரோகியாக என்றும் நடந்த தில்லை. நடந்தார் என்று யாரும் சொன்னதுமில்லை. நடந்ததாகச் சொல்லக்கூடிய நிலையில் மற்றவர்கள் இல்லாதபடி அவர் செய்திருந்தார்.

இவரிடமிருந்த துணிகரமான செயல் என்னவென் றால் தன்னைவிட எல்லா வகையிலும் பேர்பெற்ற பெரிய தான ஒன்றையோ, ஒருவரைப் பற்றியோ, மிக மிகப் பெரிய மனிதர்கள் என்று சொல்லப்படுபவர்களையோ எதிர்த்துப் போராடித்தான் தன் பெயரை மக்களுக்கு அறிமுகப்படுத்திக்கொண்டார்.

சந்தர்ப்பவாதியாக வாழச் சகியாதவர்

ஒருசமயம் கோவை ஜஸ்டிஸ் மாநாட்டில் ஆர். கே. சண்முகம் காங்கிரஸ் பிரவேசத்தை ஆதரித்துப் பேசி னார். மக்கள் கூட்டுறவுப்பெற காங்கிரஸ் கட்சிப்போன்று சந்தர்ப்பத்துக்குத் தகுந்த முறையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார். மக்களும் ஆதரிப்பதுபோல் கைத்தட்டினர். அதை எதிர்த்து அழகர்சாமி 'சந்தர்ப்ப

வாதியாக இருந்து பேரும் புகழும் பெற்ற மயிலை சீனுவா சய்யங்காரின் இன்றையநிலை என்ன?" என்பதைப்போன்று தைரியத்துடன் கேட்டார். உடனே பெரும் கைத்தட்டுப் பேரொலி எழுந்தது.

தொழிலாளரை இயக்கத்தில் பிணைக்க தொண்டாற்றியவர்

தொழிலாளருடன் சேர்ந்து தொண்டாற்றும்போது ஒரு சமயம் ரயில்வே போராட்டம் நடந்தது. காரணம் நாகையிலிருந்த தென்னிந்திய ரயில்வே ஒர்க்ஷாப்பை திருச்சிக்கு மாற்றியதால் ஓராண்டுக்குப் பின் வேலைநிறுத் தம் நடந்தது, இதனல் எம். சிங்காரவேலரவர்களின் (கான்பூரில் அகில இந்திய பொதுஉடமை மாநாட்டை கூட்டியதால் சிறைக்குச் சென்றவரில் ஒருவர்) கூட்டுறவு கிடைத்தது. அதுபோது அமெரிக்காவில் ஜாக்கே, வான் சிட்டி போன்ற பொதுவுடமை வாதிகள் கொன்றதை கண்டிக்க சென்னை மூர்மார்க்கட்டில் டாக்டர், பி. வரத ராஜுலு தலைமையில் கூட்டம் நடத்த சிங்காரவேலு முயற்சித்தார். தலைவர் உடல்நலமின்மையால் வரவில்லை. பேச்சைக் கேட்கவந்த அழகர்சாமி பேச நேரிட்டது. " ஒரு செம்படத் தொழிலாளியும் ஒரு சக்கிலித் தொழி லாளியும் அமெரிக்காவில் கொலை செய்யப்பட்டதை கண் டிக்க நாம் கூடியுள்ளோம். நமது செம்படத் தொழிலாளி தோழர் சிங்காரவேலர் தூக்கிலிடப்படும் காலம் வரலாம் அதுவே நாட்டின் விடுதலைநாள்!" என்றுகூறி சிங்கார வேலரின் பிரியமுடியா இணைப்பைப் பெற்ருர். அது முதல் சிங்காரவேலரும் இயக்க வளர்ச்சிக்கு பங்கெடுத்து பணியாற்றினர்.

காரியத்தில் கண்ணுங் கருத்துமா யிருந்தவர்

எதிர்க்கட்சித் தலைவர் எஸ். சீனுவாசய்யங்கார் காலத்திய கிருஷ்ணசாமிப் பாவலர் (காங்கிரஸ் பிரசாரக்கூட்டத் தலைவர்) 'தேசபந்து' என்னும் பத்திரிகை நடத்தி வந்தார். விருது நகரில் நாடார் ஆதரவு பெரியாருக்குப் பெருகுவதைக் கண்டு சகியாத பாவலர் பத்திரிகை மூலம் பொறுப்பற்றதானமாக எழுதினார். பெரியாரைப் போல் கொடும்பாவிக் கட்டி நகரில் அதை இழுத்துப் பின்னர் தீயிலிட்டார்கள். இச்செய்தி காங்கிரஸ் ஏடுகளில் பிரமாதமாக பிரசுரிக்கப்பட்டது. உடனே அழகர்சாமி தஞ்சாவூரில் விருதுநகர் கூட்டத்துக்கு பிரசுரம் அடித்துக்கொண்டு விருதுநகரில் வெளியிட்டார். மாலையில் அழகர்சாமி வீரவுரை நிகழ்த்தினார். அதனால் பிரிக்க முடியாத பிணைப்பை விருதுநகர் மக்களிடம் பெற்றார்.

பகைவர் படைக்குப் பயப்படாதவர்

தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம் ஆரம்பித்தது. அது வெற்றிப் பெறும் என்பதில் பெரியாருக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும் கலந்துக்கொண்டார். ரயில்வே யூனியனிலுள்ள தலைவர்கள், பொதுமக்கள் தொடர்புடையவர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டார்கள். அழகர்சாமி போத்தனூரிலிருந்து மங்களூர் வரையில் வேலை நிறுத்த மேற்பார்வையாளராக வேலை செய்தார். தொழிலாளத் தலைவருள் ஒருவரான மோ. சுவர்ணாவும் இவருடன் இருந்தார். ரயில்வேயில் வேலை செய்யும் காங்மன்களைப்பற்றி கவனிக்கவும், அந்தத் தொகுதி லேபர் கமிட்டிகள் சரியாக வேலை செய்கின்றனவா என்பதைக் கவனிக்-

கவும், பணம் பட்டுவாடா செய்யவும் காரில் புறப்பட்டார்கள்.

போலீசார் இவர்களின் சுற்றுப் பிரயாணத்தை மிகவும் உன்னிப்பாக கவனித்தனர். ஆனாலும் மூன்று நாட்களில் ஒன்பது ஜில்லாக்களுக்கும் போய் வேலை செய்தார்கள். ஒவ்வொரு ஜில்லாவுக்குள் நுழையும்போதும் அந்த ஜில்லா எல்லையிலேயே மோட்டாரின் நம்பரை மாற்றி விடுவார்கள். இதனால் போலீசார் இவர்கள் சுற்றுப் பிரயாணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

அன்பின் வழியில் அறிவுக் கண்ணைத் திறந்தவர்

திருநெல்வேலியில் முதல் ஜில்லா சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. பெரியார், திருச்சி விசுவநாதன் ஆகியோர் வந்திருந்தனர். அப்போது டாக்டர் வரதராஜுவின் "தமிழ் நாடு" சு. ம. வைத் தாக்கி எழுதும். அதைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தீர்மானம்கொண்டு வந்ததை T. சொக்கலிங்கம் எதிர்த்துப் பேசினார். அழகர்சாமியால் அத்தீர்மானம் நிறைவேறியது.

அன்று நல்ல பிரசங்கிகளில் ஒருவரான தோழர் விசுவநாதன் அவர்கள் கழுத்தில் ஒரு ஜெபமாலை போட்டிருந்தார். அது அழகர் சாமிக்குக் கோபமாக இருந்தது. 'இந்த மாலையை என்னிடம் கொடு' என்றார்—கொடுத்தார். அழகர்சாமி மாலையைப் போட்டுக்கொள்ள ஆசைப்படுகிறார்போலும் என்று விசுவநாதன் நினைத்தார். மாநாடு முடிந்து எல்லோரும் புறப்பட்டுப் புகை வண்டியில் வரும்போது அந்த மாலையைப் பிய்த்துத் துண்டு துண்டாக்கி வழிநெடுகப் போட்டுக்கொண்டு வந்தார்.

இது தோழர் விசுவநாதனுக்கு அப்போது கோபமாக இருந்தது. ஆனல், அதற்குப்பின் அவர் என்றுமே மாலையை அணிந்ததில்லை.

செல்வந்தர்களை சொக்கிவிடச் செய்யும் சொற்செல்வன்

தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்த காலத்தில், போத்தனூர்த் தொழிலாளர்களை ரயில்வே யூனியன் கலைத்துவிட்டது. அதைத் தடுக்க நாகைத் தோழர் ஆறுமுகமிடம் வாங்கிய பணம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இரண்டு நாள் அரிசி வாங்கவும் போதவில்லை. ஒருவாரம் வரை தொழிலாளர்களை கவனிக்க வேண்டியிருந்தது. அன்று கோவையில் பெரிய அரிசி வியாபாரியாக இருந்தவர் தோழர் ஆர். கே. எஸ். அவர்களின் மைத்துனர். அவரிடம் அழகர்சாமி இருபது மூட்டை அரிசி வாங்கி வந்தார். தொழிலாளர்களுக்காக அரிசி வாங்கிய வகையில் அறுநூற்றெழுபது ரூபாய் பாக்கி இருந்தது. இத்தொகைக்கு அழகர்சாமியிட மிருந்து ஒரு பத்திரம் எழுதிவாங்கிக் கொண்டார்கள். பத்திரத்தில் அழகர்சாமி கையெழுத்திட்ட மறுநாளே வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது, அப்பத்திரத்தை தோழர் அருணசலம் வாங்கிக் கொண்டார். பல தடவை பணத்தை அழகரின் தோழமை நண்பர் லிங்கமிடம் கேட்பார். ரயில்வே யூனியன் ஆபீசுக்கு கடிதம் எழுதியிருப்பதாக லிங்கம் கூறுவார். பல மாதங்களுக்குப் பிறகு கோவையில் நடந்த பொதுக்கூட்டத்தில் அழகர்சாமி பேசிவிட்டு போகும்போது, அங்கு அருணசலம் வந்தார். தன் வீட்டுக்கு அழகர்சாமி அழைத்துச் சென்று உணவிட்டார். 'கடன் கொடுக்க வேண்டு மென்பதற்காக நீ

கோவைக்கு வராமல் இருக்கலாமா?' என்று கேட்டார். நீ போன இரண்டு நாட்களில் அக் கடனை கொடுத்துவிட்டேன் என்று கூறி சிரித்தார்.

பொறுப்புணர்ந்து பணியாற்றும் பண்பினர்

பெரியார் ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண் டிருந்தபோது, சென்னையில் முதல் நாள் சுயமரியாதை மாநாடும், மறுநாள் பெண்கள் மாநாடுமாக இரண்டு மாநாடுகள் நடந்தன. திருமதி இந்திராணி அம்மாள் தலைமையில் பெண்கள் மாநாடு நடந்தது. அச்சமயத்தில் கல்கத்தாவில் மாஜிஸ்ட்ரேட் ஒருவரை ஒரு கலாசாலை மாணவி சுட்டுவிட்டதைக் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆதரித்து இருவர் பேசினர். தோழர் சிங்காரவேலர் எதிர்த்துப் பேச ஆரம்பித்தார். ஓட் எடுத்தால் தோற்றுவிடும்போலிருந்தது. அதனால் அழகர்சாமியால் பொறுக்கமுடியவில்லை. 'தலைவர் இல்லாத காலத்தில் ஏதாவது பொறுப்பற்ற முறையில் நடப்பதை என்போன்றவர்கள் எதிர்க்காமல் இருக்க முடியாது' என்று மாநாட்டுத் தலைவரிடம் கூறிவிட்டுச் சிங்காரவேலரின் பேச்சை எதிர்த்துப் பேச ஆரம்பித்தார்.

இது பெண்கள் மாநாடு. இம்மாநாட்டில் பெண்ணல்லாத சிங்காரவேலர் பேசியது எப்படித் தவறோ அதைவிட நான் பேசுவது பெரிய தவறு. 'தினம் தெருவில், காரில் அகப்பட்டு மடியும் தவளைகள் போல், பீச் ரோட்டில் மாலை நேரத்தில் பல செம்படவக் குழந்தைகள், உல்லாச சவாரி செய்யும் கார்களில்' அகப்பட்டு மடிவ

தைக் கேட்பாரில்லை— வங்காளததில் ஒரு பெண் ஒரு உயர்தர அதிகாரியைச் சுட்டதைக் கண்டிக்க கிளம்பி விட்டீர்களே! உங்களுக்கு வெட்கமில்லையா? என்று தலைவர் சிங்காரவேலர் கேட்கிறார்;' என்று இப்படியே தோழர் சிங்காரவேலரை ஆதரித்தும் எதிர்த்தும் பேசி தீர்மானத்தை ஆதரிக்கக்கூடாதென்றார். மாநாட்டினர் கொண்டுவந்த தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டது. அன்றிரவு சிங்காரவேலர் வீட்டுக்குச் சென்று சமாதானம் கூறினார் அழகர்சாமி. சிங்காரவேலர் அழகர்சாமியைப் பார்த்து, 'நீ பேசிய கருத்து முரண் பாடானது. சொன்ன உதாரணங்கள் தப்பு. எனது பேச்சை எதிர்த்து இதுவரை எவருமே பேசியதில்லை. நீ பேசியது எனக்குப் பிடிக்கவில்லை என்றபோதிலும், தலைவர் இல்லாத காலத்தில், கட்சிப் பொறுப்பை எண்ணி, எனது கருத்தை முழுதும் கண்டிக்காமலும், உனது எண்ணத்தை நிறைவேற்றும் முறையிலும் நீ கையாண்ட முறைகளைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறினார். ஏன்! சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி 'குடியரசு' பத்திரிகையில் சிங்காரவேலர் எழுதத் தொடங் கினார்.

சிறந்த தலைவரைப் பின்பற்றி அவருடைய திறமையால் பல நல்ல காரியங்களைச் சாதித்தவர்

அக்காலத்தில் பனகால் அரசரோடு சமத்துவமாக உட்கார்ந்து பேசுபவர் பெரியார் ஒருவர்தான். அடுத்த படியாக அழகர்சாமிதான் அவ்விதம் பேசுபவர். அக்கால காங்கிரஸ் நிகழ்ச்சிகளைச் சுயமரியாதை கண்களோடு தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் கலந்து பனகால் அரச

ரிடம் பேசுவார். இது ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். பனகால் அரசரைப் பார்க்கப் போகிறவர்கள் மதிப்புக்குரிய ஒரு தலைவரைப் பார்க்கப் போகிறோம் என்று சப்தம் உண்டாகாதபடி மெதுவாக நடந்து போவார்கள். பணம், பதவி, படாடோபம் அற்ற சாதாரண ஆளாகிய அழகர்சாமி ஒரு சிறந்த தலைவரைப் பின்பற்றி அவருடைய திறமையால் பல நல்ல காரியங்களைச் சாதிக்கவேண்டும் என்ற எண்ணமுடையவராய் இருந்தார்.

தயவு தாட்சண்யத்திற்காக தன் கொள்கையை விடாத தகைமையோன்!

தேர்தல் சம்பந்தமாக கடன்பட்டு கவலையாயிருந்த அழகர்சாமிக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவினார் டி. வி. சுப்பிரமணியம். அவரை நோக்கி, தோழனே! உனது கருத்துக்கு உட்படுகிறேன்; உன்னை ஆதரிக்கிறேன்; ஆனால் நீ நினைக்கிற நினைப்பின்படி நடக்காதே! இன்றோ, நாளையோ பெரியார் தலைமையில் பொப்லியின் படை புறப்படும். இதை எதிர்க்க அடையாறுக்கு சக்தி உண்டு. இதில் எங்களைப் பலியிட நீ எண்ணுகிறாயே! இது நியாயமா? என்று கேட்டார் அழகர்சாமி. உடனே தோழர் சுப்பிரமணியம், 'அழகர்சாமி! உன்னுடைய நிலையை நான் உணராமல் இல்லை; நீயோ, சங்கமோ பெரியாருக்கு விரோதமாக வரமுடியாது. இதை நான் நன்குணர்வேன்! நீங்கள் இருவரும் அவர்களுடன் சேரா தீர்கள்; என்னுடன் இருங்கள் என்றார். யோசித்து பதில் சொல்லுவதாக அழகர்சாமி சொன்னார்.

பொதுவான காரியங்களில் கட்சி வேறுபாடு கருதாதவர்

காங்கிரஸ்காரர்கள் ஆதித்திராவிடர்களைத் தங்கள் பக்கம் இழுப்பதில் பலமுறைகளைக் கையாண்டார்கள். இதனால் ஆதிதிராவிடர்கள் அநியாயமாக அடிபட்டனர். சர்க்காரும் மௌனம் சாதித்தது. இதைக் கண்ட அழகர் சாமி ஒருவருக்கொருவர் இருக்கும் அபிப்பிராய பேதத்தால் ஒருவரை யொருவர் அடிப்பது தவறு. நல்ல முறையில் சமாதானம் செய்துகொள்வது சிறந்தது என்று பல கூட்டங்கள் மூலம் பேசினார். சென்னை எழும்பூர் ஏரி மைதானத்தில் எம். சி. ராஜா தலைமையில் ஆதித்திராவிடர்கள் சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கருத்து வேற்றுமைப்பட்டிருந்த சகல ஆதித்திராவிடத் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். ஆதித்திராவிடர்களின் தனித் தொகுதி முறை பற்றிய தங்கள் கருத்தை ஓர் தீர்மானம் மூலம் சர்க்காருக்கு அனுப்ப அழகர்சாமியே முன்னின்று வேலை செய்தார்.

எங்கள் ஒப்பற்ற தலைவர் ஒருவரே

ஒரு சமயம் செட்டிநாட்டில் சுயமரியாதை மாநாடு நடத்தினர். மறுநாள் சுயமரியாதை தொண்டர்களின் முக்கியமானவர்கள் தவிர மற்றவர்கள் அவரவர் ஊருக்குச் சென்றுவிட்டார்கள். பெரியார் தங்கியிருந்த எதிர்வீட்டில் பெரியாருக்குத் தெரியாமல் கூடினார்கள். இதில் பெண்கள் **40** பேருக்கு மேலும், ஆண்கள் **100** பேருக்கு மேலும் இருந்தனர். அங்கு பெரியார் மனைவி நாகம்மையாரை, சிவகாமி அம்மையார் அழைத்து வந்தார்கள், தோழர் எஸ். இராமநாதன் எழுந்து, "தலைவர் பெரியாரிடமும்,

மற்றும் சிலரிடமுள்ள கருத்து வேறுபாட்டின் காரண மாக இங்கு கூடியிருக்கிறோம்" என்றார். 'நமது இயக்க ஊழியர்களின் கூட்டம் இது, பெரியார் செய்கைப்பற்றி உண்மைப் பொருள் தெரியாதவர்களும், அவர் செயலில் கருத்து வேற்றுமையும், மனக்கசப்பும் கொண்டவர்களும் இங்கு கூடியிருக்கிறார்கள். என்றபோதிலும் அவரைத் தவிர வேறு தலைவரை மனதில் விளையாட்டிற்குக்கூட நினைக்காத கூட்டம் இது. எனவே இருக்கும் நிலையை எடுத்துப்பேசி ஒரு நல்ல முடிவுக்கு வருவோம்' என்று அழகர்சாமி கேட்டுக்கொண்டார். சுமார் பகல் இரண்டு மணிக்கு முடிந்தது. பிறகு யாவரும் பெரியாருடன் சாப் பிட்டனர்.

பெரியார் தமது கட்சியின் மதிப்பு, அதன் வளர்ச்சி யில் தன் திட்டங்களை நன்குணர்ந்தவர். இதனால் தனது கட்சியில் சிலர் நடக்கும் முறையினை கவனியாததுபோல் மௌனம் சாதித்ததையும் அவர் மனைவியே அறியமுடிய வில்லை. இதனால் மூன்று நான்கு மாதம் வரை பேசாம லிருந்தார். மூன்று நான்கு ஆண்டுகளாக தனது குழந்தை போல பார்த்துவரும் தொண்டர்களுக்கும், தனது கணவ ருக்கும் பிளவு ஏற்படக்கூடாதே என்ற கவலையேயாகும்.

நிர்வாக முதலாளிகள் மாறினாலும் நிர்வாகத்தின் சாவியைப் பெற்றவர்

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக 'திராவிடன்' என்ற ஒரு தமிழ் தினசரியை பெரியார் மூலம் நடத்தினால் செல்வாக்கு பெறும் என்று பன்னீர்செல்வம் பாடுபட் டார். அதன்படியே பெரியாரும் ஈரோட்டில் நடத்தி

வந்த குடியரசு ஆபீசை சென்னைக்கு கொண்டுவந்தார். 'திராவிடன்' ஆபீஸ் அலுவலகம் கவனிக்க ஜஸ்டிஸ் கட்சி தோழர் கண்ணப்பர் ஏற்றுக்கொண்டார். பிறகு குமாரசாமி நாயுடு மேற்பார்வையிட்டார். அப்பொழுது பெரியார் ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு இருந்தார். குமாரசாமி நாயுடு 'திராவிடன்' பத்திரிகையை நடத்திக்கொண் டிருக்கும்போது வக்கீல் ஆறுமுகம் நிர்வாக ஆசிரியராக இருந்தார். அவரேதான் பெரியார் பதினெண்ணாயிரம் ரூபாய் 'குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் கம்பெனியாருக்கு'க் கொடுக்க வேண்டுமென்று பொய் வழக்குத் தொடுத்தார். கடைசியில் ஆறுமுகத்தின் வாதம் தோற்றுவிட்டது: பிறகு டி. வி. சுப்பிரமணியத் திடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இப்படி முதலாளி கள் மாறினாலும் 'திராவிடன்' சாவி மட்டும் அழகர்சாமி யிடம் இருந்தது. தலைவரிடமிருந்து கைமாறிப்போன ஆபீசை மீண்டும் தலைவரிடமே கொண்டுவரவே அழகர் சாமி விரும்பினார்.

வழக்கிற்கு வக்கீலை வைப்பதுமில்லை; பணம் கொடுப்பதுமில்லை

ஒரு சமயம் சென்னைக்கு வந்திருந்த சங்கராச்சாரி யாருக்கு சூனாம்பேட்டை ஜமீன்தார் பிச்சையிட்டார். அதில் மூவாயிரம் பேருக்குமேல் சாப்பிட்டனர். அப் பொழுது நடந்த சுயமரியாதைக் கூட்டத்தில், 'நம்முடைய பணம் ஏன் ஐயருக்குப் போகவேண்டும்' என்று சூனாம் பேட்டையாரைக் கண்டித்தார். சுயமரியாதை இயக்கத்தி லிருந்து சென்ற ஒருவர் தான் நடத்திய பத்திரிகையில் இதைக் குறித்து குருசாமியாரைப்பற்றி கண்டபடி

எழுதினர். தங்கசாலையில் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் மருத்துவ விடுதியில் தங்கியிருந்த அழகர்சாமியிடம் அப்பத்திரிகை ஆசிரியர் அழைக்கப்பட்டார். 'தனிப்பட்ட ஒருவரைத் திட்டி எழுதலாமா?' என்று கேட்டார். இதனால் சண்டை ஏற்பட்டு வழக்கும் தொடரப்பட்டது. வழக்கிற்காக வக்கீலை வைப்பதோ, பணம் செலவிடுவதோ கிடையாது. சிலநாளில் வல்லத்தரசு டி. எம். பார்த்தசாரதி தலையீட்டால் சமாதானமாக முடிந்தது.

சொல்லியபடியே செயலில் காட்டுபவர்

ஜஸ்டிஸ் கட்சி செட்டி நாட்டு குமாரராசாவை கண்டிக்க சென்னையில் பாத்ரோ தலைமையில் பொதுக் கூட்டம் நடத்த தீர்மானித்தது. இதனால் குமாரராசா பெருங் கவலைப்பட்டார். இதைக் கண்ட அழகர்சாமி, 'பயப்படாதீர்கள், கண்டனக் கூட்டம் நடைபெறுமல் செய்கிறேன்' என்று தைரியம் சொன்னார். குமாரராசா மகிழ்ச்சி கொண்டார். ஆனாலும் சந்தேகமும் இருந்தது. கண்டனக்கூட்டம் நடந்தது. அதுபோது அழகர்சாமி கே. எம். பாலசுப்பிரமணியத்தை அழைத்துச் சென்றார். பாலசுப்பிரமணியம் உடனே மேடைமீது ஏறி, "ஒரு துரோகியை இன்னொரு துரோகி கண்டிப்பதை நான் அனுமதிக்கமாட்டேன். பாத்ரோ அவர்கள் இன்னின்ன ஊர்களில் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகருக்கு எதிராகப் பேசியிருக்கிறார்; இன்னின்ன தேதி 'இந்து' பத்திரிகையில் அத்தச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன' என்று பேசிக்கொண் டிருக்கும்போதே பாத்ரோ கூட்டத்தை விட்டுப் போய்விட்டார். கூட்டமும் கண்டனத்துக்கு இடம் கொடுக்காமலேயே கலைக்கப்பட்டது. பின்னர்

அழகர்சாமி 'ஜஸ்டிஸ்' ஆங்கிலத் தினசரியில் குமாரராசா கண்டிக்கப்படுவார் என்று சொன்னார். அவ்விதமே கண்டிக்கப்பட்டார்.

எதிர்க்கட்சி கூட்டத்தையும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டவர்

ஒரு சமயம் பச்சையப்பன் கல்லூரியில், 'தமிழன்பர்கள் மாநாடு' ஒன்று நடந்தது. அதன் மூலகர்த்தா கல்கி-கிருஷ்ணமூர்த்தி. இதில், 'சுதேசமித்திரன்' - சீனுவாசன், இந்து -வெங்கடராம சாஸ்திரி, மந்திரி குமாரசாமி, சத்தியமூர்த்தி போன்றவர்கள் கலந்துகொண்டார்கள். அழகர்சாமி, 'நாத்திக மாநாடு' நடத்த ஏற்பாடு செய்த பணத்தை 'தமிழன்பர் மாநாடு' எதிர்ப்பு வேலைக்குச் செலவு செய்தார். டி. வி. சுப்பிரமணியம், பார்த்தசாரதி, நடேசன், ஜீவானந்தம், எஸ். இராமநாதன், தாவுத்ஷா, மாசிலாமணி, அழகர்சாமி எதிர்ப்புக்கட்சி வரவேற்பு பிரதிநிதிகளாகச் சென்றார்கள். சுப்பிரமணியம் மாநாட்டுத் தலைவர் பிரேரணையை எதிர்த்தார். தமிழன்பர்கள் பெயரால் தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றுவதற்கு உடந்தையாக தலைவரும் இருக்கிறார் என்றார். ஆலோசனைக் கமிட்டியில் செய்யப்படும் தீர்மானங்கள் மாநாட்டுக்கு கொண்டுவர வேண்டும். அக்கமிட்டியில் நம்மைச் சார்ந்தவர்கள் பாதிபேர் இருக்கவேண்டும்' என்றார் அழகர்சாமி. அதற்கெல்லாம் தலைவர் இணங்க மாநாடு தொடங்கியது.

முடியுந் தறுவாயில், "நண்பர்களே! மாநாடு இனிது முடிய சுயமரியாதைக்காரர்களுக்கே அப்பெருமைகள்

சாரும். ஈரோடு திரு. இராமசாமி நாயக்கரும் நானும் நெருங்கிய நண்பர்கள் என்று பலருக்குத் தெரியாது. இனிமேல் தப்பெண்ணங்களை மறந்து மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதில் ஒன்றுபடுவோம்' என்று பெருந்தன்மையாகப் பேசினர். மாநாடு முடிந்ததும் கல்கி கண்டபடி கதறியது. உடனே அழகர்சாமி எஸ். வி. லிங்கத்தை பேசும்படி கூறினர். அவரும், வெங்கடராம சாஸ்திரியார் இராமசாமியைப் புகழ்ந்தார்; கல்கியார் இகழ்ந்தார் என்று ஒருவராகப் பேசினர், மாநாடும் முடிந்தது.

தலைவரின் கட்டளையைத் தட்டாதவர்

டாக்டர் சுப்பராயன் அவர்கள் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் ஜில்லாபோர்டு தேர்தல் ஒன்று நடந்தது. டாக்டர் சுப்பராயனுக்கு ஏ. டி, பன்னீர்ச் செல்வம் என்ருல் பிடிக்காது. ஆனல் இவ்விருவரும் பெரியாரிடம் பெரு மதிப்புக்கொண் டிருந்தார்கள். இந்த மூவர்க்கும் அழகர்சாமி நல்லவராக நடந்துகொண்டார். அதே சமயத்தில் கட்சி வளர்ச்சியில் கருத்தூன்றி இருந்தார். இதில் வெகு குஷியாக சோர்வின்றி வேலை செய்வார். ஜில்லாபோர்டு தேர்தலில் டாக்டர் சுப்பராயனும், ஏ. டி. பன்னீர் செல்வமும் நம்பியிருந்தார்கள். ஆனல் அழகர்சாமிக்கு ஏ. டி. பன்னீர்செல்வமே வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணங்கொண்டு வேலை செய்தார். ஏ. டி. பன்னீர்செல்வமும் வெற்றி பெற்ருர்.

சட்டசபை தேர்தல் ஒன்று நடந்தது. அதில் தோழர் எஸ். முத்தையாவைத் தேர்ந்தெடுக்கவேண்டும்

என்று பெரியார் கட்டளையிட்டார். எஸ். முத்தையாவை தேர்ந்தெடுக்கக்கூடாது என்று செல்வம் கட்சி எண்ணி யிருந்தது. தலைவரின் கட்டளையை நிறைவேற்றினால் செல்வம் கட்சி கோபப்படுமே என்று அழகர்சாமி பயப்படவில்லை. தலைவர் கருத்துக்கு மாறுபடாமல் தனது திறமையால் அவற்றைச் சாதித்துக் கொடுக்கவேண்டும் என்று எண்ணினர் அழகர்சாமி. இதனல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி புரியவில்லை. ஆனல் ஜில்லாவின் ஆதிக்கம் ஐயங் கார்கள் வசம்வரமுடியாது என்பது திண்ணமாகிவிட்டது. இதனல் தோழர் ஏ. டி. பன்னீர்செல்வமும் கவலைப்பட வில்லை. அழகர்சாமியிடம் கொண்ட நீங்கா நட்புக்குக் காரணம், அழகர்சாமிக்கு கட்சியின் வளர்ச்சியிலுள்ள நுணுக்கமான புத்திசாலித்தனம், அரச தந்திரம் திறமை ஆகியவைகளை நன்கு அறிந்துகொண்டதேயாகும்.

அழகர்சாமி அவர்கள் தன் வாழ்நாளை தனக்கெனப் பயன்படுத்திக் கொண்டவரல்ல; உண்மையை உலகிற்கு அறிவிக்க—இன உணர்ச்சியற்ற தமிழர்களுக்கு உணர் வூட்ட - தன்னை திராவிடன் என்று சொல்ல நாணும் திரா விடனைத் திருத்தி தன்னைத் திராவிடன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடையும்படி செய்ய—எதிர்ப்பா? இன்னலா? பரவாயில்லை சகித்துக்கொள் நீ வாழாவிட்டா லும் உன் பின் சந்ததியார் வாழ—அக்கிரகாரம் அதட்டி னலும், மதம் மருட்டினலும், அரசாங்கம் தண்டித் தாலும் உன் கடமையைச் செய் என்று இந்த தமிழகத் திற்கு எடுத்துக் கூறிய உத்தமர்.

ஒரு சிலர் சில நல்ல கருத்துக்களை ஏட்டின் மூலம் எழுதிக்காட்டுவர், மேடைகளிலே முழங்குவர்; ஆனல்

செயல் முறையில் செய்து காட்டும் திறம் இருப்பது ஒரு சிலருக்கே அமையும் தோழர் அழகரி அவர்கள் உண்மையைப் பேசுவார்; ஏடுகளில் எழுதுவார்; செயல்முறையில் செய்து காட்டுவார், அதுவும் பிறர்செய்ய அஞ்சும் அருங் காரியங்களையும் செய்து அதில் வெற்றி காண்பார்.

சுயமரியாதைக் கருத்துகள் புகாத பட்டிதொட்டிகளிலும் சரி, இன்று சுயமரியாதைக் கோட்டையாக திகழும் இடங்களிலும் சரி, முதன் முதலில் பேசி பகுத்தறிவு விதையை விளைத்தவர் தோழர் அழகர்சாமி அவர்கள் தான்.

'இந்த கூட்டத்தில் தாங்கள் பேசவேண்டாம்,இன்று இந்தக் கூட்டத்தில் கல்லடியும், கேள்வி மாரியும் ஏராளமாகவர இருக்கிறது. குண்டர்களும் கலகக்காரர்களும் குழப்பம் விளைவிக்கப் போகிறார்கள் ஆகவே தாங்கள் பேசாமல் திரும்பிப் போவது நல்லது" என்று கூறினால் தோழர் அழகரி புன்முறுவலுடன் இந்தமாதிரியான கூட்டங்களைத்தான் நான் எதிர்பார்ப்பது. இந்த கூட்டத்தில் எனக்கு சில கல்லடிகள் கிடைக்கும் ஆனால் அடுத்த கூட்டம் எப்படி யிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது சுயமரியாதை வீரர்களை இன்று கல்லால் அடித்தவர்கள் நாளை மலர்மாலைகொண்டு வரவேற்பார் என்பதை மறந்துவிடாதீர்" என்று கூறி கூட்டத்தில் பேசுவார் கல்லடிகளைத் தாங்குவர்—ஆனால் அதற்காக அஞ்சாமல் அவர்களுக்குச் சில சொல்லடிகளையும் தருவார். அந்த சொல்லடிகள் கல்லடிகளைவிட அதிக வேகமாகச் சென்று எதிரிகளுடைய உடலை துளைத்துக்கொண்டு செவியின் வழியாய் உள்ளத்திலே சென்று தாக்கும். அத்தகைய அருமை

யான திருத் தொண்டை செய்த வீரர் அழகர்சாமி அவர்கள்.

தோழர் அழகர்சாமி முதன் முதலில் பேசி கல்லடிகளைப் பெற்றுக்கொண்டு திரும்புவார். ஆனால் அவர் பேசிய பேச்சின் பயனாக அந்த ஊர் நிச்சயமாக சுயமரியாதைக் கோட்டையாகத் திகழும். அந்த ஊருக்கு அழகரி மறுபடியும் சென்றால் மலர்மாலைகள் மலைபோல குவிந்திருக்கும் ஆனால் அவர் அந்த மாலைகளுக்காக சென்றதில்லை. வேறு யாருக்காகிலும் அந்தபாக்கியம் கிடைக்கும்.

இவ்விதமாக பெயருக்கோ-புகழுக்கோ - பதவிக்கோ பாடுபடாமல் உண்மைக்காக - மெய்மைக்காக மக்கள் நன்மைக்காகப் பாடுபட்டவர் அழகர்சாமி அவர்கள்.

திராவிட மென்னும் கரடுமுரடான நிலத்தில், முயற்சி, தைரியம் என்று கடப்பாரை மண்வெட்டி இவைகளின் உதவியால் சமப்படுத்தி, பகுத்தறிவுத்தீயால் அறியாமை, காட்டையும், அதனுள் அடங்கியிருக்கும் மூடநம்பிக்கை, மதஊழல்கள், அடிமைத்தனம் ஆரியம்என்னும் காட்டு விலங்குகளையும் அழித்து, அன்பு, கருணை, என்னும் நீர் பாய்ச்சி, சுயமரியாதை என்னும் விதைகளை விதைத்து வந்தார். அவர் விதைத்த வித்துக்களில் ஒன்றும் வீண்போகவில்லை. அது விளையும் என்பதில் அவர் சந்தேகம் கொண்டதில்லை. ஆனால் அவர் அதன் விளைவைக் கண்டு, பயனை அனுபவிக்கு முன்னரே மரணம் என்னும் கொடியோன் அவரை அழைத்துக்கொண்டான்.

ஆம்! அழகரி மறைந்தார். இந்த மண்டலத்தைத் தட்டி யெழுப்ப தன்மான உணர்ச்சி யூட்டிய உத்தமன் மறைந்து விட்டார்.

எப்படி மறைந்தார்? திராவிடத்திற் குழைத்து உழைத்து உடலைக் கெடுத்துக்கொண்டார். அவர் பேசுவார்; கூட்டம் முடியும். வரும் வழியில் அழகரி இரும்பி எச்சல் உமிழ்ந்தால் இரத்தங் வடியும் ஏன்? இந்த நிலை?

உணர்ச்சி வயப்பட்டுப் பேசிப் பேசிச் சூடேறி, உடல் குன்றிவிட்டது. ஆனால் உற்சாகம் குன்றாமல் பணியாற்றி வந்தார். திராவிடர்களின் நன்மைக்காக அவர் பாடுபட்டார். அவருக்காக திராவிடர்கள் பாடுபட, பாதுகாக்க மறந்து விட்டார்.

அழகரி அவர்கள் மனம் வைத்திருந்தால் சீமான்களோடு கைகுலுக்கி சீமை சாராயம் குடித்துகொண்டு, விருந்துகளிலும், நடன சாலைகளிலும் நாளைக் கழித்துக் கொண்டு காரிலே சவாரி செய்துக்கொண்டு மாளிகையிலே வாசம் செய்திருக்கலாம். அந்த வாழ்வு வாழ வழி தெரியும்.

அவருக்கு திறமையும் உண்டு, அதுமட்டுமல்ல அந்த வாழ்வு "வா! வா!" என்று பலமுறை கைதட்டி அழைத்ததுண்டு. ஆனால் அவர் அதை மறுத்து விட்டார்!

வறுமையில் வாடினார்; வசதியின்றி தவித்தார். ஆனால் எந்த துன்பம் நேர்ந்த போதிலும் அவர் தன் பொதுச் சேவையை மறந்தது கிடையாது. இத்தகைய கடமை வீரர் மறைந்து விட்டார். ஆம்! இறந்துவிட்டார்.

'பூ' என்றால் தாமரை; 'பா' என்றால் திருக்குறள், 'அறிஞர்' என்றால் அண்ணா; பெரியார் என்றால் ஈ. வே. இராமசாமி; 'புரட்சிக் கவிஞர்' என்றால் பாரதிதாசன்; அதுபோலவே 'அஞ்சா நெஞ்சன்' என்றால் அழகர்சாமி அவர்கள். இத்தகைய மாண்பு மிக்கவர்தான் இறந்து விட்டார்.

அவரை வந்தடைந்த நோய் 'இருமல்' ஆம்! இந்த பயங்கர நோய்தான் அவர் தன் வாழ்நாளின் இறுதி பகுதியில் பெற்ற பரிசு!

ஆணவக் காரர்களோடும், அரசியல் சூதாடிகளோடும், மதவெறியர்களோடும், ஆரியத்தோடும் அறியாமையோடும் போரிட்டு வெற்றி பெற்ற வீரர் T. B. என்னும் கொடிய நோயுடன் போராடினார் வெற்றிபெற முடியவில்லை. தோற்றார். இதனால் ஒரு மாணிக்கத்தை இழந்து விட்டது திராவிடம்.

தோழர் அழகர்சாமி நோய்வாய்ப்பட்டிருந்தபோது பொறுப்பு வாய்ந்தவர்கள்கூட முழு அக்கரையும் கொள்ளவில்லை. இது மிகமிக வருந்தத் தக்கது. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் அழகர்சாமியின் நோய் நீங்க வேண்டும் என்பதற்காக மிகவும் அக்கரைக் கொண்டார். தன்னால் ஆன எல்லா உதவிகளையும் அவர் அழகரிக்குச் செய்தார். அதுமட்டுமல்லாமல் அண்ணா அவர்களை யாராவது பேச அழைத்தால் தோழர் அழகரின் பெயருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பணம் M. O. செய்துவிட்டு அந்த ரசீதைக் காட்டினால் வருவதாகச் சொன்னார். அவ்விதமே செய்திருக்கிறார். தோழர் அழகர்சாமியின் மீது

அண்ணு அவர்களுக்கு எவ்வளவு அக்கரை ஆர்வம் என்பதை அவரே கூறுகின்றுர் கேளுங்கள்.

" அஞ்சா நெஞ்சுடன் அறிவுப் பணிபுரிந்த அழகர் சாமியே! நீயா மறைந்தாய்? நின்னை மக்கள் மறந்தபோதிலும் அவர்களை நீ மறவாமல் அரும்பணியாற்றி வந்தனையே! கைமாறு கருதாது கடமையைச் செய்த கர்ம வீரனே. நீயா மறைந்தாய்? என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதை நடைமுறையில் செய்து காட்டிய செம்மலே, நீயா மறைந்தாய்? எதிர்ப்பையே விருந்தாகக் கொண்டு, எண்ணற்ற மக்களின் அறிவுக்கண்களைத் திறந்த ஏந்தலே நீயா மறைந்தாய்? பகுத்தறிவுப் பாசறையின் படைத் தலைவனே நீயா மறைந்தாய்? தாயைப் பிரிந்த சேயைப்போல் தவித்து நின்ற தமிழ்மக்களின் தன்மானத்தைக்காக்க வந்த தனபதியே நீயா மறைந்தாய்? அந்தோ! அழகர்சாமி நீயா மறைந்தாய்? நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் செய்தி! மறக்க முடியாத சம்பவம்! மனம் குழம்பும் நிகழ்ச்சி!!"

இவ்விதம் மனம் குழம்பி வருந்திஞர் நமது அருமை அண்ணு அவர்கள்!

தோழர் அழகர்சாமியின் உழைப்பை இந்த நாடு இருபத்தைந்து ஆண்டுகளாக உறுஞ்சிவிட்டு அவரைத் தள்ளிவிட்டது. அதஞல் அவர் புகழ், அவர் ஆற்றிய அருஞ்செயல் இவைகள் திராவிடம் இருக்கும் வரையில் மங்காது குறையாது.

அழகரி அவர்கள் ஓர் குடும்பஸ்தர். அவர் பிரிந்தார். குடும்பம் எப்படி வாழும்? மனைவி, மக்கள். தள்ளாத தாய் இவர்களைக் காப்பாற்றுவார் யார்?

அஞ்சா நெஞ்சன் அழகரியின் பேச்சு, திராவிடத்திற்கு ஒரு கலைஞர் கருணாநிதியைத் தந்தது, கலைஞர் கருணாநிதியின் பேச்சும், எழுத்தும், திராவிடத்திற்குப் பல அழகர்சாமிகளைத் தந்த வண்ணம் இருக்கிறது. இருந்தும் அழகரியின் குடும்பம் வாழ வழி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இயக்கத்தில் நல்லெண்ணம் உள்ளவர்கள் உள்ளத்தில் உதித்தன.

இந்த எண்ணத்தின் முடிவு, **29—5—49** அன்று அறிஞர் அண்ணாவின் தலைமையில், நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் 'காந்திமாகான் வில்லுப் பாட்டு' 'கிந்தனார் கதைக் காலப்போக்கு' ஆகியவைகள் நடந்தன.

இதன் மூலம் வசூலான தொகை ரூபாய் **3500**, இத்துடன் தோழர் **N. S. K.** அவர்கள் ரூ. **2500** சேர்த்து மறைந்த மாவீரன், அஞ்சாநெஞ்சன் அழகரியின் குடும்பத்திற்கு ரூ. **6000** நன்கொடையாக கொடுத்து உதவினார்கள்.

அந்த நிதியளிப்பு விழா மிகமிகச் சிறப்பாக நடைபெற்றது, அந்த விழாவில் அழகர்சாமியின் குடும்பம் கலந்து கொண்டது. அவருடைய மூன்று புதல்வியரும், இரு புதல்வர்களும், தள்ளாத தாயாரும் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் நகரப் பிரமுகர்கள், வழக்கறிஞர்கள், ஜமீன்தார்கள், கணக்கற்றப் பொது மக்கள் கலந்து கொண்டு அஞ்சா நெஞ்சன் அழகரிக்கு அனுதாபத்தைக் காட்டிக் கொண்டனர்.

அந்த மாபெரும் கூட்டத்தில் அழகரி அவர்களின் உருவப்படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படம் ஏலத்தில் விடப்பட்டு **250** ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த விழாவை முன்நின்று வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தவர் தோழர் பொன்னுசாமி அவர்களாவர்.

பொது மக்களால் போற்றிப் புகழப்படும் பெருமை பெற்ற தோழர் அழகர்சாமி அவர்கள் தன்னுடைய **52** வயதில் **(28—3—49)** அன்று இயற்கை யெய்தினர். அன்று பூத உடல் மறைந்தது. ஆனல் புகழுடல் என்றுமே அழியாது வளர்ந்து வருகிறது.

அவர் கடைசியாகப் பேசிய மாநாடு ஈரோடு மாநாடாகும். அவர் அன்று பேசிய அந்த மொழிகள் கேட்டவர் செவியின் மூலம் உள்ளத்திற்குச் சென்று ஆழப் பதிந்துவிட்டது.

தோழர் அழகர்சாமி ஏழை; ஆனல் அவரைப் பணக்காரர்களும் புகழ்ந்து போற்றினர். அவர் ஓர் இல்லறத்தார் ஆனல் அவரைக் கண்டு சாது சன்யாசிகள் நடுக்க முற்றனர். அவர் ஓர் மத விரோதி ஆனல் அவர் பேச்சைக் கேட்டு மடாதிபதிகள் மருண்டனர். அவர் ஒரு சாதாரண மனிதர் என்று கூறிக் கொண்டார். இருந்தும் அவர் பேச்சைக் கேட்டு அரசாங்கம் அதிர்ந்தது. அவர் யாரையும் மயக்க விரும்பவில்லை; ஆனல் அவர் வாயிலிருந்து வந்த ஒவ்வொரு சொல்லும் மயங்கிக் கிடந்த திராவிடர்களை தட்டி யெழுப்பி மயக்கத்தை ஒழித்துத் தெளிவை உண்டாக்கின.

பணம் அவருக்குப் பரவசமூட்ட முயன்றது; பதவி ஆசைக் காட்டி அழைத்தது. ஆனல் அவர் நீதியைக் காதலித்தார்; நேர்மையைத் துணையெனக் கொண்டார்.

தோழர் அழகரி தி. க. வா அல்லது தி. மு. க. வா என்ற பிரச்சனைக்குள் அகப்படாமல் இருவராலும் போற்றப்படுபவர்.

பெரியார் இராமசாமிக்கு அடுத்தபடியாக வைத்துப் பார்க்கும் ஒரே ஓர் ஒப்பற்ற தளபதி.

அஞ்சா நெஞ்சன், ஆற்றல் உடையோன்; திராவிடர்களின் அழியாத அறிவுக் களஞ்சியம்.

அழகர்சாமி அவர்கள் சுட்டிக் காட்டிய வழியே நடப்போம்.

வாழ்க திராவிடம்!

உயிர் தந்து உயர்ந்த உத்தமர்கள்

1938—ஆம் ஆண்டு இயக்க வளர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பயன் பட்ட ஆண்டு. அந்த ஆண்டிலே தான் நமது பெரும் படையின் வெற்றி முரசு ஒலித்தது வடநாட்டிலிருந்து இறக்குமதியான இந்தி மொழியை எதிர்க்க திராவிடம் திரண்டெழுந்த காலம் அந்தக் காலத்தில் தமிழைக் காத்திட ஆயிரமாயிரம் இளைஞர்கள் முன் வந்தனர். "தமிழ் வாழ்க இந்தி ஒழிக" என்ற குரல் எழுப்பினர். பள்ளிக் கூடங்களின் முன்னர் மறியல் செய்தனர் பொதுக் கூட்டங்களில் தேவையற்ற இந்தியை நுழைப்பதின் காரணத்தை விளக்கினர் மாநாடுகள் கூட்டி, தீர்மானங்களை நிறைவேற்றி ஆட்சி யாளருக்கு அனுப்பினர். இந்த நல்ல காரியங்களில் ஈடு பட்டிருந்த தோழர்களை, அறிஞர்களை, தலைவர்களை அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்தது.

"சிறைச்சாலை என்ன செய்யும்?" என்ற கேள்விக் குறியை எழுப்பிவிட்டு உள்ளே சென்றனர் எண்ணற்றோர். தண்டனைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்தனர். ஆனால் அதில் இருவர் மட்டும், வாழ்வை முடித்துக் கொண்டு வெளியே வந்தனர். உயிரோடு சென்று பிணமாகத் திரும்பி வந்தனர். தமிழைக் காக்கும் பணியில் ஈடுபட்டுத் தன் உயிரையே அதற்காகத் தியாகம் செய்து விட்டனர்.

அந்த இரண்டு திராவிட வீரர்கள், தமிழ் படை வீரர்கள்! உயிரை விட மொழியே உயர்ந்தது என்று கருதிய கர்ம வீரர்கள்.

யார் அவர்? என்று சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலேயில் எவரும் இல்லே. தமிழைக் காத்து உயிர் துறந்தவர்கள் என்று கூறிவிட்டால் போதும் திராவிடம் உணரும் அவர்கள் பெயரினே தொண்டினே.

இந்த அளவிற்கு தங்கள் பெயரை திராவிட மக்கள் மனதிலும், மொழியைக் காக்கும் வரலாறு வெளியிடப் பட்டால் அதிலும் ஆழப்பதித்துக் கொண்டார்கள்.

அந்த திருப் பெயர் இன்று ஒவ்வொரு செயல் வீரனுடைய உள்ளத்திலும், உதட்டிலும் நடமாடிக் கொண்டிருக்கிறது. ஆட்சியாளரால் அடிபட்டு விழும் போது—அடக்கு முறைக்கு ஆளாகும் போது, அயர்ச்சி நேரிடும் போது அவர்களோ—மற்றவர்களோ அந்தப் பெயர்களே உரைத்தால் புத்துணர்ச்சியும், புதிய மலர்ச்சிகளேயும் பெற்று மகிழ்வார்கள் அந்த அளவுக்கு மதிப்புடையவை அந்தப் பெயர்கள்.

தமிழ் காத்த தாலமுத்து—நடராசன் என்னும் பெயர்களே மேற்குறித்த பெருமைகளே உடையன. இத்தகைய பல மாணிக்கங்கள் நமது திராவிட இயக்கத்தில் நாம் பார்க்கின்றோம். அவர்களே திராவிடம் மறவாது. வாழ்க அந்த மாவீரர்கள்! வாழ்க தூரணி புகழ் தாலமுத்து—தமிழ் காத்த நடராசன்.

o o o o

தேர்தல் நடைபெற்றது அதிலே மிகவும் முக்கிய பங்கு தாங்கி, முழுநேரம் உழைத்து வந்தார் ஒருவர். அவர் உழைப்பைக் கண்டு அஞ்சிய எதிரிகள் அவரை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

தன் கடமையை செய்துக் கொண்டு வந்த போது, இறந்து விடுவோம் இல்லை வஞ்சகர்களால் நடுத்தெருவில் குத்திக் கொலை செய்யப்படுவோம் என்று எப்படித் தெரியும் அந்த கடமை வீரருக்கு!

ஒருநாள் அவர் குத்திக் கொல்லப்பட்டார். கடமை செய்யும் போது மாண்டு மடிந்தார். இந்த செய்தியை நாம் சென்ற தேர்தலில் கேட்டோம். நெல்லிக்குப்பம் மஜீத் அவர்கள்தான் குத்திக் கொல்லப்பட்டார்.

அவர் செய்த தவறு திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளரான தோழர் திருக்குறள், முனுசாமி அவர்களுக்காகத் தேர்தலில் உழைத்தார். அதுவும் உண்மையாக சற்றும் அயராது உழைத்தார். அதற்காக குத்திக் கொல்லப் பட்டார் எதிரிகளால்.

ஆம் ஒரு திராவிடனின், கொள்கை வீரனின் குருதி கொட்டப்பட்டது கொடியவர்களால். அந்தக் கடமைவீரனை வாழ்த்துகின்றோம், அவர்கள் குடும்பத்திற்கு அனுதாபம் கூறுகிறோம்!

o o o o

சென்னையில் படுகொலை நடந்தது அனைவரும் அறிந்ததே யாகும். பாண்டியன் படுகொலையைப் பற்றி இதற்குள் திராவிடம் மறந்து விட்டிருக்காது. நமது

இயக்கத் தோழர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக உயிரை இழந்தார்.

கொடியவர்கள் கொலை செய்தனர். திராவிடர்கள் இரத்தம் கொதித்தது, மற்றவர்கள் மகிழ்ந்தனர் இந்த செய்தியும் உலகறியும்.

o o o o

ஜுலை 15, ஆம்! திராவிடரின் விடுதலைப் போராட்டம் துவங்கிய நாள்! இரத்த ஞாயிறு என்று ஒரு சிறப்பு ரஷ்யாவுக்கு இருப்பது போல் அன்று திராவிடருக்கு இரத்த நாள்!

மாசு படிந்திருந்த திராவிடத்தை, தங்கள் குருதி களால் கழுவி சுத்தம் செய்த தூய நாள்—யார் மறந்தா லும் வரலாறு மறக்காத மகத்துவம் மிக்க நாள்!

அதுமட்டுமல்ல. நாடு நல்ல நிலைமை அடைய—கேடுகள் ஒழிய—பொய் பொல்லாங்குகள் நாசமாக—ஆணவம் அடியோடு மறைய—சர்வாதிகாரவாதி, சாக—எதிர்த்துப் போராடி இரத்தம் சிந்தி—ஏன் உயிர்களை யும் ஈந்த புனித நாள் ஜுலை 15!

அந்த ஜுலை பதினைந்தில் ஆறு உயிர்கள் உடலை விட்டுப் பிரிக்கப்பட்டன. இறப்போம் என்று எதிர் பாராத மக்கள் இறந்து விட்டனர். டால்மியாபுரமாக இருந்தது கல்லக்குடியாகி இருக்கும் இடத்திலும், தூத் துக்குடியிலும் ஆறு பேர் பிணமாயினர்.

அந்தோ அந்த அறுவர் தன்னை பெற்று பிரியத் தோடு வளர்த்த அன்னையர்களை அலறும்படி செய்து

விட்டு, தாலி கட்டிய மனைவியர்களின் அழுகைகளைப் பற்றிக் கவலைப்படாமல், இந்த நாட்டின் இழிவைத் துடைக்க— புனிதர் என்று போற்றப்பட தங்கள் உயிர்களை நீத்தனர்.

அந்த அறுவர் உயிர்கள் பிரிக்கப்பட்டது அல்ல அதிசயம், ஆனல் அதற்காக அனுதாபப்பட்டவர்கள் யார் யார் என்ற ஒரு ஆராய்ச்சியை செய்வோமானுல் தெரியும்.

கருப்பையா இறந்தார் அதற்காக அனுதாபம் காட்டியவர்களும், பணம் தந்து உதவியவர்களையும் மனதிலே நினைத்துக்கொண்டே ஆராயுங்கள். திரா விடர்கள் அறுவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மஜீத் கத்தியால் குத்திக்கொல்லப்பட்டார், பாண்டியன் படு கொலைக்காளானுர், தாலமுத்துநடராசன் பிணமாயினர். இவ்வளவு உயிர்கள் பிரிந்திருக்கின்றன. ஆனல் இந்தப் பெரிய அரசியல் தலைவர்கள் அவர்கள் உயிரை என்ன வென்று கருதுகின்றனரோ அறியமுடியவில்லை.

கருப்பையாவின் உயிரில்தான் தேன் சொட்டு கிறதோ—கிருஷ்ணசாமி சாகவில்லை. அவ்வளவு தானே வித்தியாசம். இருந்தாலும் அதைப்பற்றியெல் லாம் கவலை இல்லை. கருப்பையாவுக்கு நிதி அளிக்க வேண்டும். அவர் காங்கிரஸ் பக்தர் மற்றவர்கள் அப் படியா? என்ற நினைவுபோலும்!

'உங்களுக்கும் நிதி வேண்டுமா?' என்று கேட்டு விடப்போகின்றனர் காங்கிரஸ் அகிம்ஸா மூர்த்திகள் எங்களுக்கு நீதிவேண்டும். நியாயம் வேண்டும்.

அன்புள்ளவர்களே!

தாலமுத்துவை இழந்தோம், நடராஜனையும் பலி கொடுத்தோம், மஜீத் அவர்கள் உயிரையும் குடித்து விட்டனர், பாண்டியனைப் படுகொலை செய்தனர், கல்லக்குடி, தூத்துக்குடியில் அறுவர் பிணமாக்கப்பட்டார்கள். இன்னும் எத்தனையோ தோழர்கள் பயங்கர குற்றச் சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

அவர்களுக்காக அரசாங்கமோ, காங்கிரஸோ கடுகளவும் இரக்கம் காட்டாது, நாமும் எதிர்பார்க்கவில்லை. ஆனல், நமக்காக—நாட்டிற்காக பலியான அந்த நல்லவர்கள் ஒவ்வொரு திராவிடனின் உள்ளத்திலும் பதிந்து வாழ்கின்றனர். அந்த தூயவர்களை எதிர்காலம் வாழ்த்தும். அவர்களைப் பெற்று பொதுப்பணிக்கு அனுப்பிய தாய்மார்களை உலகம் புகழும். நமது இலட்சியம், இன்பக் கனவு நனவாக அதிக நாட்கள் இல்லை.

இன்பத் திராவிடம் மிக விரைவில் உதயமாகப் போகிறது. துன்பமற்ற இன்ப நாட்டில், வறுமையற்ற இன்ப வாழ்வு நாம் வாழப்போகிருேம் நிச்சயமாக என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு!

ஆகவே நாட்டின் நன்மைக்காக உயிர் இழந்த உத்தமர்களை—வாழ்த்துவோம்—வணங்குவோமாக.

'திராவிட நாடு திராவிடருக்கே!' என்று முழங்குவோம்!

திராவிட நாடு திராவிடருக்கே!

அறிஞர்கள் சிந்திய

அமுதத் துளிகள்

தாகூர் முத்துக்குவியல்	0 8 0
லெனின் பொன்மொழிகள்	0 8 0
இங்கர்சால் அறிவுரைகள்	0 8 0
விவேகானந்தர் வீரவுரைகள்	0 8 0
இராமகிருஷ்ணர் அருள்மொழிகள்	0 8 0
இயேசுநாதர் அருள்வாக்குகள்	0 8 0
கம்பர் கற்பனைகள்	0 8 0
கீதை உபதேசமொழிகள்	0 8 0
ஷேக்ஸ்பியர் வர்ணனைகள்	0 8 0
ஸ்டாலின் புரட்சிமொழிகள்	0 8 0
வள்ளலார் வாய்மொழிகள்	0 8 0
அண்ணாவின் உவமைகள்	0 8 0
கருணாநிதியின் கருத்துரைகள்	0 8 0
திருக்குறள்	0 8 0
மாஜினி மணிமொழிகள்	0 8 0

கலைமன்றம்

சென்னை-1

வீர வரலாறுகள்

ஊடுருவி எழுதியவை:—

வீரமங்கை ஜோன்	1	0
நெப்போலியன்	1	0
சீனத்துச் சிங்கம் (சன்யாட்சன்)	1	0
வால்டையர்	1	0
உலகைத் திருத்திய உத்தமர்கள்	1	0
,, இரண்டாம் பாகம்	1	0
கலிங்கப் போர்	1	0

விருதை ந. இராமசாமி:—

தாமஸ் மசாரிக்	1	0

மு. நமசிவாயம்:—

தூத்துக்குடி துப்பாக்கி பிரயோகம்	0	8
கல்வி திட்டப் போராட்டம்	0	8
டால்மியாபுரப் போராட்டம்	0	8

கலைமன்றம்

சென்னை-1.

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1.

திராவிட இயக்கத் தலைவர்கள்

வாழ்க்கை வரலாறுகள்

★

1.	அறிஞர் அண்ணாதுரை	0 8
2.	தலைவர் பெரியார்	0 8
3.	புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	0 8
4.	கடமை வீரர் கருணாநிதி	0 8
5.	அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி	0 8
6.	பன்னீர் செல்வம், பாண்டியனார், வேலாயுதம்	0 8
7.	நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன்	0 8
8.	சம்பத், நீலமேகம்	0 8
9.	ஆசைத்தம்பி, சிற்றரசு	0 8
10.	இராமாமிர்தத்தம்மையார், பூங்கோதை, அருண்மொழி,	0 8

— கழிவு வழக்கம் போல் —

கிடைக்கும் இடங்கள்

கலைமன்றம்
122, வரதாமுத்தியப்பன்தெரு,
சென்னை—1

M.S. ராமுலு கம்பெனி
2[illegible]6, சைனா பஜார்
சென்னை—1